விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை (28.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009



அரிசி விலை 400/= வரை அதிகரிக்கும் 03



ஏப்ரலில் ஆட்சிக் கவிழ்ப்பு 05

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு துணை போகக்கூடாது 07

தேவைப்பட்டால் 4 ஆவது தடுப்பூசி 03




# வங்குரோத்து நிலையை நோக்கி இலங்கை

## பல தசாப்தங்களுக்கு மீள முடியாது

### பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ஆதங்கம்



*(கொழும்பு)*

**நாடு மீளமுடியாத வங்குரோத்து நிலையை நோக்கி பயணிக்கின்றது. இவ்வாறு நிலைமை தொடர்ந்து சென்றால் பல தசாப்தங்களுக்கு அதிலிலிருந்து மீளமுடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.**

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 15

தை மாதத்திலிருந்து

## வடக்கு மாகாண மேல் நீதிமன்ற நடவடிக்கை வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

2022ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து வடக்கு மாகாண மேல் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் வழமைபோல் இடம்பெறும் 15

கொடிகாமம் மிருசுவிலில்

## லான்ட் மாஸ்ரரிலிருந்து தவறிவிழுந்தவர் மரணம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் சிறிய வகை உழவு இயந்திரத்தில் (லாண்ட் மாஸ்ரர்) இருந்து தவறி விழுந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 58 15

## கொரோனா 17 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 17 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

இதற்கமைய நாட் 15

## 'குடும்ப ஆட்சி நாட்டை அழிக்கும்'

### சஜித் தீவிர பரப்புரை

(கொழும்பு)

நாட்டு மக்கள் நெருப்புடன் கூடிய துன்பத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தயாரிக்கப்பட்ட "குடும்ப ஆட்சி நாட்டை அழிக்கும்" என்ற துண்டுப் பிரசுரத்தை அம்பாந்தோட்டைப் பகுதியில் நேற்று விநியோகம் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டு மக்கள் 15

தெல்லிப்பழையில்

## மரம் வீழ்ந்ததில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் - தெல்லிப்பழை, சூளாம்பதி கிராமத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் மரம் முறிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை, 15

மேலும் ஒரு இராணுவ அதிகாரி

## அமெரிக்காவுக்கு நுழையத் தடை



(கொழும்பு)

இலங்கையின் இன்னுமொரு இராணுவ அதிகாரிக்கும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 15

பீ.பி.ஜயசுந்தரவின்

## பதவி விலகலை ஏற்றார் ஜனாதிபதி



15

## சிலைகள் கடத்தியவர்கள் ஜனவரி 5 வரை மறியலில்

20 தெய்வ விக்கிரகங்கள் மீட்பு



15

## கடன் கொடுத்த நாடுகளின் வசமாகும் நாட்டின் முக்கிய நிலப்பரப்புகள்

### ஐ.தே.கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

நைஜீரியாவிலிருந்து கடன் அடிப்படையில் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்யவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த கடனை மீளச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது 15

## ஜே.வி.பியுடன் கூட்டணிக்கு ஆளும் தரப்பு பேச்சு

(கொழும்பு)

"மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கூட்டணி அமைக்க ஆளுந் தரப்பைச் சேர்ந்த சிலர் பேச்சு நடத்தி வருகின்றனர்."

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்களுடன் சென்ற வான் விபத்து

(பாணந்துறை)

கொரோனா தொற்றாளர்களை தனியார் வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்ற சொகுசு வான் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

பாணந்துறை - அலுபோமுல்ல பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் இந்த வான் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் காயமடைந்த 70 வயதுடைய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை விபத்துக்குள்ளான வானில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இருப்பதை தெரிந்துகொண்ட பிரதேச மக்கள் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ தயக்கம் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வான் பலாங்கொடை பிரதேசத்தில் இருந்து தனியார் வைத்தியசாலைக்கு 7 கொரோனாத் தொற்றாளர்களை ஏற்றி வந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ம)

# நல்லாட்சியில் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளை விதிக்கவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தங்களது ஆட்சிக் காலத்தில் சர்வதேச நாணய நிதியம் கடுமையான நிபந்தனைகளை விதிக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திப்பு ஒன்றினைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் என்பன தற்போது பாதிப்படைந்துள்ளன.

சுமார் 5 வருடங்கள் தான் ஜனாதிபதியாக சேவையாற்றிய தோடு குறித்த காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளேன்.

சர்வதேச நாணய நிதியம் எமக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்கவில்லை.

அதேபோன்று சில கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் தெளிவுபடுத்தி அவ்வாறு செயற்பட முடியாது என அறிவித்தமையை அடுத்து அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய சகல நிறுவனங்களும் ஒவ்வொரு நாட்டினதும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அமையவே உதவி செய்கின்றன என்றார். (ம)

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நிர்வாகப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **தாரணி சிவகேசன்** அவர்களின் பாசமிகு தந்தை

**திரு. நடராசா சுப்பிரமணியம்**

(C-3368)



தோற்றம் : 02.09.1940 மறைவு : 27.12.2021

அவர்கள் நேற்று (27.12.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

# பூநகரி கௌதாரிமுனையில் இளைஞன் படுகொலை

## பெண் உட்பட நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - பூநகரி, கௌதாரிமுனை பகுதியில் இளைஞன் ஒருவன் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பெண் உட்பட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் 28 வயதுடைய பெண் எனவும் மற்றையவர்கள் 54 மற்றும் 34 வயதுடைய சந்தேகநபர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சான்றுப் பொருளாக படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை பகுதியில் இருந்து கௌதாரிமுனை பகுதிக்கு சுற்றுலா சென்ற குழுவும் குருநகர் பகுதியில் இருந்து படகு மூலம் அப்பகுதிக்கு சென்ற குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில், ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த ரஞ்சன் நிரோஷன் என்ற 22 வயதுடைய இளைஞன் உயிரிழந்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-18,33,315)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 - 08 - 1963

உதிர்வு
28 - 12 - 2020



அமரர்
**சந்தனம் சிவா**

[ ஓய்வுபெற்ற யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய அலுவலக உதவியாளர் ]

கணப்பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை விளக்கே!
நீங்கள் இமைப் பொழுதில் எம்மை விட்டகல்விரென
அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது.
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...

மாரீசன்கூடல்,
இளவாலை.

(C-3369)

குடும்பத்தினர்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** ( இருபாலாரும் )
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- **அலுவலகச் செய்தியாளர்கள்** ( இருபாலாரும் )
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- **ஒப்புநோக்குநர்** ( இருபாலாரும் )
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்** ( ஆண் )
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை தயாரித்து
பொது முகாமையாளர்,
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு
சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

**முடிவுத் திகதி : 10.01.2022**

பொது முகாமையாளர்
- வலம்புரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதல பாதாளத்திற்கு செல்லும் இலங்கை!

## சர்வதேச விமான பயணங்களும் கட்டுப்படுத்தப்படும் அபாயம்

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடி காரணமாக பயணிகள் மற்றும் சரக்கு விமானங்கள் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.**

தற்போது இலங்கையின் விமான நிலையங்களுக்கு வரும் விமானங்களுக்கு டொலரில் மட்டுமே எரிபொருள் நிரப்பப்படுகிறது. அத்துடன் விமான நிறுவனங்களும் தங்கள் உள்ளூர் பிரதிநிதிகளுக்கு பெரும் தொகையான பணம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய, இலங்கைக்கு அனுப்பும் விமானங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது மற்றும் விமான பயணங்களின் எண்ணிக்கையை குறைப்பது குறித்து வெளிநாட்டு விமான நிறுவனங்கள் பரிசீலித்து வருகின்றன.

இந்த நிலைமை இலங்கையின் எதிர்கால சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது.

நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அதிக முதலீடு செய்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கைக்கான விமான சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டால் முதலீடு செய்யப்படும் பணம் வீணாகிவிடும் என சுற்றுலாத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு வாரத்திற்கு 12 விமானங்களை முன்பதிவு செய்து வந்த வெளிநாட்டு விமான நிறுவனங்கள், தற்போது அந்த எண்ணிக்கையை மூன்றாக குறைத்துள்ளன.

இதேவேளை சில விமான நிறுவனங்கள் இலங்கைக்கு விமானங்களை அனுப்புவதை நிறுத்தியுள்ளன.

இலங்கையில் சுற்றுலாத்துறையை நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் விமான நிறுவனங்களுக்கு செலுத்தும் டொலர்களை எவ்வித இடையூறும், தடையும் இன்றி அதே முறையில் செலுத்த வேண்டும் என்பதே சுற்றுலாத்துறையின் கருத்தாகும். (நி)

## அரிசி விலை 400 ரூபா வரை அதிகரிக்கும்

## எதிரணி எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி செயலாளர் பிபீ ஜயசுந்தர பதவி விலகுவதால் நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. எனவே, தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு ஒட்டுமொத்த அரசும் பொறுப்புக் கூற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இரசாயன உரத்துக்கு தடை விதித்துவிட்டு 24 மணிநேரத்துக்குள் சேதன பசளையை நோக்கி நகரும் தவறான முடிவை இந்த அரசு எடுத்தது. இதன் விளைவாக நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அரிசி தட்டுப்பாடு ஏற்படும். குறிப்பாக அடுத்த இரு மாதங்களில் அரிசி விலை 400 ரூபா வரை உயரும். தற்போது ஒரு கிலோ கீரி சம்பா 250 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என விவசாயத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் அறிவித்தார். அவரின் அறிவிப்பு சரியானது. எனினும், அதற்காக அவர் பதவி விலக்கப்பட்டார்.

தற்போதைய நிலைக்கு ஜனாதிபதி செயலாளர் பிபீ ஜயசுந்தரவே காரணம் என சிலர் விமர்சிக்கின்றனர். ஆனால், அரசின் தவறான முடிவுகளே காரணம். எனவே, ஒட்டு மொத்த அரசும் பொறுப்பு கூறவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்

## நால்வர் மருத்துவமனையில்



(கொழும்பு)

இரத்மலானையில் இருந்து சிகிரியாவிற்கு சுற்றுலாப் பயணிகளுடன் பயணித்த விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கிம்புலாபிட்டிய பகுதியில் உள்ள வயல் வெளியொன்றில், தரையிறங்கியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

திடீரென தரையிறக்கப்பட்டதில் குறித்த விமானத்தில் பயணித்த நால்வரில் மூவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும், மற்றையவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் நீர்கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (நி)

## தேவைப்பட்டால் 4 ஆவது தடுப்பூசி

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட இலங்கையர்களின் தரவுகளை மீளாய்வு செய்ததன் பின்னர் தேவைப்பட்டால் நான்காவது தடுப்பூசி வழங்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். இன்னமும் மூன்றாவது தடுப்பூசியை உரிய முறையில் மக்கள் பெற்றுக் கொள்ளவில்லை. மூன்றாவது தடுப்பூசியை பெற்றவர்களுக்கு சிறிய கால அவகாசம் தேவைப்படுகிறது. அதன் பின்னர் நான்காவது தடுப்பூசி குறித்து சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## ஜனவரி 20 இற்கு முன்னர் சா/த பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி விண்ணப்பங்களை கல்வியமைச்சின் இணையத்தளம் மூலமாக பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கலாம் என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

விண்ணப்பப் படிவங்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாதிரிகள் www.doenets.lk என்ற இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். (நி)

## முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் கட்டாயம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் கட்டண அறவீட்டுக்கான மீற்றர் கட்டாயமாக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் படி, இதற்கான விதிமுறை அமுலாக்கப்படும் என அகில இலங்கை முச்சக்கர வண்டிகள் தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்குள், அனைத்து மாகாணங்களிலும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணங்களை அறவிடுவதற்கான மீற்றரை பொருத்துதல் கட்டாயமாக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் வெற்றிக் கிண்ணம்

## இமையாணன் மத்தி அணி சம்பியன்




இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் நடத்திய "இளையோர் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டியில்" இமை யாணன் மத்தி விளையாட்டுக்கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடினர்.

இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் இமையாணன் மத்தி அணி வீரர் உதைத்த பந்தை தடுக்க முற்பட்ட போது மனோகரா அணி வீரரின் காலில் பட்டு கோலாகியது.

அதனைத் தொடர்ந்து 50 ஆவது நிமிடத்தில் இமையாணன் மத்தி அணி வீரர் அலெக்சன் மற்றுமொரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் இமையாணன் மத்தி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

ஆட்டநாயகனாக இமையாணன் மத்தி அணி வீரர் அலெக்சன் தெரிவு செய்யப்பட்டார். (6)

# நல்லூர் ரோட்டரி கழகத்தால் துவிச்சக்கரவண்டிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ரோட்டரி கழகத்தினரால் துணுக்காயில் 15 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் மற்றும் புத்தகப் பை என்பன வழங்கி வைக்கப்பட்டன.

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்விளர்ன் மகா வித்தியாலய மாணவர்கள் 15 பேருக்கே துவிச்சக்கரவண்டி மற்றும் புத்தகப் பை என்பன வழங்கி வைக்கப்பட்டன,

தேவையுடைய மாணவர்களுக்காக நல்லூர் ரோட்டரி கழகத்தால் வருடம்தோறும் டிசம்பர் மாதம் இச்செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இம்முறை துணுக்காய் கல்வி வலயத்தில் மேற்கொள்ளபட்டது.

இதன்போது 15 துவிச்சக்கரவண்டிகள் மற்றும் புத்தகப் பை என்பன மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. நல்லூர் ரோட்டரிக் கழகத் தலைவர் கபிலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு. உமா சங்கர், துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். விக்னரூபன், இச்செயற்திட்டத்திற்கு நிதிப் பங்களிப்பு செய்து வரும் மனித நேயர் த.ரமேஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் வித்தியாலய அதிபர், நல்லூர் ரோட்டரி கழக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம)






குலோத்துங்கன்




தினேஷ்




யுவசாந்




வானதி




றஜினா




சுகன்யா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

28.12.2021
மார்கழி 13, செவ்வாய்க்கிழமை
நவமி பிற்பகல் 1.42 மணிவரை
சித்திரை பின்னிரவு 12.23 மணிவரை
சுபநேரம் 10.58-12.28 மணிவரை
இராகு காலம் -3.28-4.58 மணிவரை
சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்


மேஷம்

நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


மிதுனம்

பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும், மரியாதையும் உயரும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


சிம்மம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் சிறப்படையும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய நபர்களைச் சந்திப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.


கன்னி

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

குடும்பத்தில் உள்ளவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், தேவையற்ற குழப்பங்களை தவிர்ப்பது நல்லது.


தனுசு

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


மகரம்

ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம்.


மீனம்

தொழில் ரீதியான பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்பத்தில் சிறுசிறு விவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வரவும் செலவும் சமமாகும் நாள்.

நல்ல மனிதன் பொறுமையைக் கடைப்பிடிப்பான்.

# ஏப்ரலில் பாரிய ஆட்சிக் கவிழ்ப்பு

## விஜயதாச ராஜபக்ஷ பகிரங்க எச்சரிக்கை

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக பாராளுமன்றத்திற்குள் பாரிய ஆட்சிக் கவிழ்ப்பொன்று ஏற்படும் என்று பகிரங்கமாக எச்சரிக்கப்பட்டுள்ளது.**



ஊடகம் ஒன்றுக்கு ஆளுந்தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்துரைத்த அவர், "இலங்கையில், தற்போது மிகவும் மோசமான சூழலே நிலவுகிறது. மக்கள் மத்தியில் குரூரமும் வன்முறையும் தலைதூக்கியுள்ளது.

எனவே அவர்களை அடக்கி அரசாங்கத்தினால் முன்னோக்கிச் செல்ல முடியாது. எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் பாராளுமன்றத்திற்குள் பாரிய ஆட்சிக் கவிழ்ப்பொன்று ஏற்படும். அவ்வாறில்லை எனில் அரசாங்கத்தில் அதிகார மாற்ற புரட்சி நிச்சயம் ஏற்படும்" என அவர் தெரிவித்தார். (ஙி)

# கொரோனா புள்ளி விபரங்களில் குழப்பம்

## உபுல் ரோஹன தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பில் அதிகாரிகளால் வெளியிடப்படும் புள்ளிவிபரங்களில் சிக்கல் இருப்பதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலங்களில் மக்களின் நடத்தை மிகவும் வருத்தமளிப்பதாக அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இந்நிலையில், கொவிட் தொற்றாளர்கள் தொடர்பில் வெளியிடப்படும் தகவல்கள் எந்த அளவு உண்மையானது என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஙி)

# தனிநபர் சுதந்திரத்திற்கு சட்டம் இயற்றுவது நாகரிகமான செயற்பாடல்ல

## திருமணத்திற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கண்டிக்கத்தக்கது என்கிறார் கரு

(கொழும்பு)

இலங்கை பிரஜை வெளிநாட்டு பிரஜை ஒருவரை திருமணம் முடிப்பதாக இருந்தால் அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் பூரண அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என பதிவாளர் நாயகத்தினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டு பிரஜைகளின் சுதந்திரத்தை வரையறுப்பதற்காக அரசாங்கம் எடுத்திருக்கும் இந்த தீர்மானத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை பிரஜை ஒருவர் வெளிநாட்டு பிரஜை ஒருவரை திருமணம் செய்வதாக இருந்தால், பாதுகாப்பு அமைச்சின் பூரண அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என பதிவாளர் நாயகத்தினால் சுற்றுநிருபம் ஒன்று வெளியிட்டிருப்பதாக தெரியவருகிறது.

அவ்வாறாக இருந்தால், அது [illegible]



வடிக்கை என்பதுடன் அருவருக்கத்தக்க செயலாகும். நாகரிகமான ஒரு அரசாங்கம் ஒரு போதும் பிரஜைகளின் முக்கியமான தனிப்பட்ட சுதந்திரத்துக்கு சட்டம் இயற்றுவதில்லை.

அரச நிர்வாகம் என்பது அறிவியல் தத்துவங்களின் அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர, குடும்பங்களின் சாதாரண நிலைமைக்கு சட்டம் அமைக்கும் செயற்பாடு அல்ல.

இலங்கையில் திருமணம் முடிக்கும் சுதந்திரத்துக்கு ஏற்ற வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த புதிய வரையறையானது இலங்கை பிரஜைகளை இரண்டு முறைகளில் நடத்துவதற்கான அடித்தளமாகும் என அவர் தெரிவித்தார். (ஙி)

20 ஆவது ஆண்டு நினைவு தினம்
கலைஞானி.
அ.செல்வரத்தினம்
மண்ணில் 23.07.1933
விண்ணில் 28.12.2001

கலைஞானி அ.செல்வரத்தினம் அவர்கள் இம் மண்ணுக்காற்றிய பணியை இந்நாளில் நினைவுகூர்ந்து வணங்குகின்றோம்.
(9239)
கலைஞானி ஞாபகார்த்த குழு சார்பாக
எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரால் புறக்கணிக்கப்படும் பிள்ளைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படுவர்

## சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

(சாவகச்சேரி)

**18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளை பெற்றோர் கவனிக்கத் தவறும் பட்சத்தில் அரசாங்கம் உரிய திணைக்களம் ஊடாக அவர்களை கவனிக்க நடவடிக்கை எடுக்கும் என சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தெரிவித்துள்ளார்.**

அண்மையில் சாவகச்சேரி பிரதேசத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை மற்றும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை ஆகியன தொடர்பாக அறியவே கிராமம் கிராமமாக பொலிஸார் சென்று சிவில் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்கள் மற்றும் கிராம மட்ட அரச உத்தியோகத்தர்களைச் சந்தித்து வருகின்றனர்.

பிள்ளைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பெற்றோரின் பங்களிப்பு எவ்வளவு அவசியமோ அது போன்றதே பொலிஸாரின் பங்களிப்பும்.

பெற்றோரால் புறக்கணிக்கப்படும் பிள்ளைகள் அரசாங்கத்திற்கு சொந்தம். 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளைக் கவனிப்பது பெற்றோரின் கடமை. பெற்றோர் அந்த கடமையில் இருந்து தவறும் பட்சத்தில் அரசாங்கம் உரிய திணைக்களங்கள் ஊடாக நடவடிக்கை எடுத்து அந்தப் பிள்ளைகளை கண்காணிக்கும்.

பெரும்பாலான பெற்றோர்கள் தாம் செய்யும் தொழிலை பிள்ளைகளுக்கும் பயிற்றுவிக்காமல் தாம் செய்யும் தொழிலை விட பல படி மேலான ஒரு தொழிலில் பிள்ளைகளை அமர்த்தவே விருப்பப்படுவார்கள். அதுபோலவே வாழ்க்கைக்கான சிறந்த வழியைக் காட்டவே பொலிஸார் செயற்படுகின்றனர்.

பொலிஸார் மக்களை பயமுறுத்த வரவில்லை. சாவகச்சேரி பகுதியில் சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் மாதம் மாதம் இடம்பெறும். அதன்போது பொது மக்கள் கிராமத்தில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்த முடியும் என மேலும் தெரிவித்தார். (5-6-30)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இடம்பெறும் வாராந்தச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இதில் சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் ச.முகுந்தன் "யார்பெறுவார் அச்சோவே" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (5-6)

# செயற்குழுக் கூட்டம்

(குப்பிழான்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இல.143, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து செயற்குழ உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)

# இரண்டு பிரிவுகளாகும் தென்மராட்சி பிரதேச சபை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிப்பதற்கான திட்டவரைவுகளை எல்லை நிர்ணயக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சில் இருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

21.12.2021 திகதியிடப்பட்டு உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளரிடம் இருந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பரந்துபட்ட பிரதேசத்தை உள்ளடக்கிய தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக பல தரப்பினரிடமும் மக்களாலும் புத்திஜீவிகளாலும் முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல் காலத்தில் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர் அங்கஜன் இராமநாதனிடமும் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதன்போது மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக அளித்த வாக்குறுதிக்கமைவாக தென்மராட்சி பிரிப்பிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தற்போது எல்லை நிர்ணயக் குழுவின் அனுமதிக்காக சென்றுள்ள நிலையில் எல்லை நிர்ணயக்குழு தென்மராட்சியை பிரிப்பதற்கான எல்லை வரைபுகளை அனுப்புமாறு மாவட்ட செயலரைக் கோரியுள்ளது.

தற்போது அறுபது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள தென்மராட்சி பிரதேச செயலகம் இரண்டாக பிரியும் பட்சத்தில் தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகம்- தென்மராட்சி மேற்கு பிரதேச செயலகம் என இரண்டாக பிரிவடையும்.

தென்மராட்சி கிழக்கு 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகவும், தென்மராட்சி மேற்கு 32 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகவும் பிரித்து கடந்த காலத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-30)

# ஆதனவரி செலுத்தல்

(யாழ்ப்பாணம்)

2022ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 2022 ஜனவரி 01 தொடக்கம் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரை 10 வீதக் கழிவுடன் செலுத்த முடியும்.

அதற்கமைய மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் வார இறுதி நாட்களிலும் விடுமுறை தினங்களிலும் (பொங்கல் தினம் தவிர்த்து) காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் ஆதன வரியைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் அறிவித்துள்ளார். (5)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு புங்குடுதீவு கண்ணகி அம்மன் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம்பெறும். (5-6)

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(குப்பிழான்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2022 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விபரங்களை 076 634 5136 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் அறிவித்துள்ளது. (5-6-18)

# அரசியல் தலையீட்டால் தவிர்க்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் தலையீட்டினால், தடைப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரிகள் மட்ட தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அங்கு கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலருக்கு எதிராக பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்நிலையில், கடந்த 23 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

விஜயத்தின் போது அங்கே பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார். அதனை தொடர்ந்து அதிகாரிகள் உட்பட ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்களையும், இடமாற்றம் செய்ய தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் அரசியல்வாதி ஒருவரின் தயவை பொறுப்பதிகாரி நாடியதை அடுத்து, அவரின் தலையீட்டினால், பொறுப்பதிகாரியின் இடமாற்றம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அதேவேளை, குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் ஒருவர் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். குறித்த கான்ஸ்டபிளுக்கும் பல தடவைகள் இடமாற்றம் வழங்கப்பட்ட போதிலும், அவரும் ஏதோ ஒருவகையில் தனது இடமாற்ற உத்தரவை இரத்து செய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலேயே தொடர்ந்து கடமையாற்றி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (5-6-33)




# நிர்வாகத் தெரிவு

(குப்பிழான்)

குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இ.மகேஸ்வரராஜ் தலைவராகவும், இ. நிரூபன் செயலாளராகவும், வை. தமிழ்ச்செல்வன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றன. (5-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோவில் பயணிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்

## எரிபொருள் விலை அதிகரிப்பே காரணமாம்



(கொழும்பு)

நாட்டில் தற்போது, எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக ஆடம்பர வாகனங்களை பயன்படுத்த முடியாது எனக் கூறி, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தானே முச்சக்கர வண்டியை ஓட்டிச்சென்றுள்ளார்.

பொருளாதார கஷ்டங்கள் காரணமாக முச்சக்கர வண்டியில் பயணிப்பதிலும் மக்களுக்கு சிரமமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஙி)

# பேச்சுவார்த்தை தோல்வி

## பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(கொழும்பு)

பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தமது தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன குறிப்பிட்டார்.

ரயில் சமிக்ஞை கட்டமைப்புகளை புனரமைக்காமை, சேதமடைந்த ரயில் பெட்டிகளை போக்குவரத்திற்கு பயன்படுத்தி பயணிகளை உயிராபத்துக்குட்படுத்துவதை எதிர்த்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி)

# 65 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் மீட்பு

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட முற்பட்ட ஏழு பயணிகளிடமிருந்து 65 மில்லியன் ரூபாயிற்கும் அதிகமான பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட் டுள்ளன.

அமெரிக்க டொலர்கள், யூரோக்கள் மற்றும் ஸ்ரேலிங் பவுண்ஸ் உட்பட மொத்தம் 65 மில்லியன் ரூபாயிற்கும் அதிகமான மதிப்புள்ள நாணயங்களை, பயணிகளின் பொதிகளுக்குள் புத்திசாலித்தனமாக மறைத்து வைத்திருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் வெளிநாட்டு நாணயங்களை சுங்கத் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் நாட்டிலிருந்து கடத்த முயன்றதாக இலங்கை சுங்கப் பேச்சாளர் சுதத்த டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இலங்கை சுங்கப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஙி)

# வடக்கு- கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம் கட்சிகள் துணைபோகக்கூடாது

## முன்னாள் அமைச்சர் முஸ்தபா வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் கட்சிகள் ஒருபோதும் ஆதரவு வழங்கக்கூடாது என முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில்,

"தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய அரசிடம் கடிதமொன்றை கையளிக்க முற்படுகின்றன. அந்தக் கடிதத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைத் தமிழ்க் கட்சிகள் கோரினால், அதனை வழங்கவே கூடாது.

கிழக்கு மாகாணத்தைவிடவும் அதிகளவான முஸ்லிம்கள் வெளி மாவட்டங்களில்தான் வாழ்கின்றனர்.

எனவே, புரிந்துணர்வு உடன்படிக்கைக்குச் செல்ல முன்னர் அனைத்து முஸ்லிம்கள் தொடர்பிலும் கட்சிகள் சிந்திக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஙி)


**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம், அனுசம் முதலாம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் (தோசம் இல்லை). கிரகபாவம் 58, பிறந்தது 1992.12.21, உயரம் 5'6", தொழில் என்ஜினியராக வேலை செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு இல.
076 068 0223
021 224 1411
(9259)



## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### ஆட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல்-2022 (04.01.2022-31.12.2022)

1. இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம்
2. காலம் :- 03.01.2022 ஆம் திகதி திங்கட்கிழமை
3. நேரம் :-மு.ப.10.30

**இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் சித்தி பெறுபவர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும்.
2. ஒப்பந்த காலம் 04.01.2022- 31.12.2022
3. இந்நகராட்சி மன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இவ் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.
4. ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புக் கட்டணத்தை அலுவலகத்தில் 03.01.2022 மு.ப.10.00 மணிக்கு முன்னர் செலுத்துவதுடன் **தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும்** கொண்டுவருதல் வேண்டும்.
5. குத்தகை தொடர்பான மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை நகராட்சி மன்றத்தின் கணக்குப் பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**2022 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடை, கோழி இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல. | குத்தகை விபரம் (04.01.2022-31.12.2022) | ஆகக்குறைந்த ஏலத்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை இல-01 | 302,000.00 | 3,500.00 |
| 02 | கோழி இறைச்சிக்கடை இல-01 | 1,233,000.00 | 12,500.00 |
| 03. | கோழி இறைச்சிக்கடை இல-02 | 1,233,000.00 | 12,500.00 |

குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் இறைச்சிக்கடைகளிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.
28.12.2021 (C-3367)

திருமதி சிவமங்கை இராமநாதன்,
தவிசாளர்,
சாவகச்சேரி.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து உயரம்:5'8"
கி.பா: சூரி 2 செவ் 12 இல்
நட்சத்திரம்:பூரம் 4
தகைமை/தொழில்:B.Com பட்டதாரி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் (பட்டதாரி)
தொ.இ: B/12062

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்:சுவாதி 2
உயரம்: 162 cm
கி.பா:செவ்9 சூரி 10இல்
தகைமை/ தொழில்:உயர்தரம் வியாபாரம்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12063

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்:உத்தரம் 4
கி.பா: 14 ½ செவ் 5 சூரி 9இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:உயர்தரம் (லண்டன்)
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/12065

பிறப்பு:1980 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா:26 செவ் 6சூரி 5இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:BA பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரசவேலை. விவாகரத்தானவர் (மனைவி இறந்து விட்டார்) பிள்ளைகள் இல்லாத விவாகரத்தானவர் ஏற்கப்படும்
தொ.இ: B/12066

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1989 கிறிஸ்தவம் (RC)
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா:23 ½ செவ்6 சூரி6இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L மின்சாரசபை சுப்பர்வைசர்
எதிர்பார்ப்பு:படித்தவர். இந்து மதமும் ஏற்றுக் கொள்ளப்படும்
தொ.இ:G/12243

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா:38 செவ் 7 சூரி 7இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12246

பிறப்பு:1995 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா:33 சூரி 12 செவ் 11 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:கணக்காளர் BA(Hons) Business and Management Studies Acca (Following)
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/12247

பிறப்பு:2000 கிறிஸ்தவம் (RC)
நட்சத்திரம்:கேட்டை
கி.பா: செவ் 4 சூரி 4இல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/12248

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2021 இல் பெரும் அழிவு, துன்பங்களுக்கு வித்திட்ட காலநிலை மாற்றம்

## ஆய்வில் தகவல்

**(வோஷிங்டன்)**

**காலநிலை மாற்றம் 2021 ஆம் ஆண்டில் மில்லியன் கணக்கானவர்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியதாக கிறிஸ்டியன் எய்ட் என்ற தொண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2021 ஆம் ஆண்டில் உலகெங்கும் மிக மோசமான 10 இயற்கைச் சீற்றங்கள் பதிவாகியுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் உயிர்ச் சேதங்கள் மற்றும் அதிகமான பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்கள் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதுடன், பொருளாதார ரீதியாகவும் பெரும் அழிவுகளுக்கு வழிவகுத்ததாக அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்கள் வீடு, உங்கள் வாழ்வாதாரங்கள் மற்றும் அனைத்தையும் இழந்து, அதை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஆதாரங்கள் இல்லாமல் தவிப்பது நம்ப முடியாத அளவுக்கு கடினமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் மிக மோசமான அழிவுகளைத் தவிர்க்க கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதிக முயற்சிகளின் அவசியத்தை அறிக்கை வலியுறுத்துவதுடன் காலநிலை மாற்றத்தைச் சமாளிக்க ஏழை நாடுகளுக்கு செல்வந்த நாடுகள் உதவ வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# பெண்கள் தனியாக பயணம் செய்ய முடியாது

## தலிபான்களின் கடும் கட்டுப்பாடு



(காபூல்)

ஆண் துணையில்லாமல் பெண்கள் நீண்ட தூர பயணம் மேற்கொள்ள முடியாது என ஆப்கானிஸ்தானை நிர்வகித்து வரும் தலிபான்கள் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தான் நிர்வாகத்தை சில மாதங்களுக்கு முன் தலிபான் அமைப்பு கைப்பற்றியது. கடந்த 1990களில் பெண்களுக்கு அதிகளவு கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்திருந்தனர். தற்போது மீண்டும் நிர்வாகம் அவர்களிடம் வந்துள்ளதால் பெண்கள் அச்சமடைந்துள்ளனர்.

பாடசாலைகளில் மேல்நிலைப் படிப்புகளில் பெண்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. சமீபத்தில் வெளியிட்ட உத்தரவில், தொலைக்காட்சிகளில் பணிபுரியும் பெண் நிருபர்கள், நிகழ்ச்சி தொகுப்பாளர்கள், முழு உடலை மறைக்கும் ஆடைகளை அணிய வேண்டும் என தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி 72 கி.மீ. தூரத்துக்கு மேற்பட்ட பயணத்தின்போது ஆண்கள் துணையில்லாமல் பெண்கள் பயணிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதுவும் அந்த ஆண் நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும்.

அத்துடன் முழு உடலை மறைக்கும் ஆடைகளை அணிந்தால் மாத்திரமே பெண்கள் பயணம் செய்ய முடியும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காபூலில் உள்ள அனைத்து ஆண் மாணவர்கள் கற்கும் பள்ளிகளில் கற்பிக்கும் பெண் ஆசிரியர்களுக்கு தலிபான் தலைமையிலான கல்வி அமைச்சகத்தால் பணிக்குச் செல்ல ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு பெண் ஆசிரியர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாகியுள்ளது.

20 ஆண்டுகளுக்குப் பிறகு தலிபான்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியுள்ளதால் பெண்களின் உரிமைகள் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதுடன், பயங்கரவாதக் குழு ஆட்சியின் கீழ் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொள்ள நேரிடும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (நி)

# கொரோனாவை மறந்து மெரினாவில் கூடிய மக்கள்



(சென்னை)

நாடு முழுவதும் ஒமிக்ரோன் பரவலைத் தொடர்ந்து புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மெரினா உள்ளிட்ட அனைத்து கடற்கரைகளிலும் புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக மக்கள் ஒன்றுகூடக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைக் கருத்திற்கொள்ளாது நேற்று முன்தினம் மெரினா உள்ளிட்ட சுற்றுலாத் தலங் களில் கூட்டம் அலைமோதியது.

அடுத்த வாரம் புத்தாண்டையொட்டி கடற்கரைக்கு செல்ல முடியாது என்பதால் ஞாயிற்றுக்கிழமையான நேற்று முன்தினம் மெரினா கடற்கரையில் கட்டுக்கடங்காத வகையில் கூட்டம் காணப்பட்டது.

இதன் காரணமாக மெரினாவில் உள்ள அனைத்து கடைகளிலும் விறுவிறுப்பாக வியாபாரம் நடைபெற்றது.

கடந்த 2 நாட்களாகவே மெரினாவில் மக்கள் அதிகளவில் திரண்டு பொழுதை போக்கினார்கள்.

கொரோனா பரவல் முடிவுக்கு வராத நிலையில் ஒமிக்ரோன் தொற்று வேகமாக பரவி வருகிறது.

இதனால் மக்கள் தேவையில்லாமல் பொது இடங்களில் கூடுவதை தவிர்க்க வேண்டும் என தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இருப்பினும் கொரோனாவை மறந்து பொதுமக்கள் மெரினாவில் கூடி பொழுதை கழித்துள்ளனர். (நி)

# அமைதிக்கான நோபல்பரிசு பெற்ற பேராயர் டெஸ்மண்ட் காலமானார்

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவியவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் டெஸ்மண்ட் டுட்டு தனது 90 ஆவது வயதில் காலமானார்.



நிறவெறி எதிர்ப்பு தலைவரான நெல்சன் மண்டேலாவின் சமகாலத்தவர்.

தென்னாபிரிக்காவில் 1948 முதல் 1991 வரை கறுப்பின பெரும்பான்மையினருக்கு எதிராக வெள்ளை சிறுபான்மை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட இனப் பிரிவினை மற்றும் பாகுபாடுக் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இயக்கத்தின் உந்துசக்திகளில் ஒருவராக இருந்தார்.

நிறவெறி முறையை ஒழிப்பதற்கான போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்கிற்காக 1984 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிறை விடுப்பில் வீடு சென்றுள்ள நளினி

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையின் தண்டனை கைதியான நளினி ஒரு மாத சிறைவிடுப்பில் வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கும் தன்னை அருகிலிருந்து கவனித்துக்கொள்வதற்காகத் தன் மகள் நளினியை, சிறை விடுப்பில் விடுவிக்க வேண்டும் என்று அவர் தாயார் பத்மா, சென்னை மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இதற்கு தமிழக அரசாங்கமும் ஒப்புதல் அளித்திருந்தது. இந்தநிலையில் நளினி ஒரு மாத சிறை விடுப்பில் நேற்று வெளியே வந்துள்ளார்.

முன்னதாக கடந்த 2019 ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் திகதியும் ஒரு மாத சிறை விடுப்பின்கீழ் நளினி வீடு செல்ல அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருவாசக அரண்மனையைப் பார்வையிட்ட தமிழறிஞர் மீனாட்சி சுந்தரம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்த தமிழ்நாடு மதுரையைச் சேர்ந்த பெரும் தமிழறிஞரும், கவிஞருமான சொ.சொ.மீனாட்சி சுந்தரம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனை மற்றும் அயலிலுள்ள சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சியகம் ஆகியவற்றை சிவபூமி அறக்கட் டளையின் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனுடன் இணைந்து பார்வையிட்டார். (5-6-18)



அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் எழுதிய "மன்னார் மாதோட்டப் புலவர்கள் கலைஞர்கள்" என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் நானாட்டான் புனித டிலாசால் கல்லூரியில் இடம்பெற்றது. வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சுஜீவா சிவதாஸ், மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, வடக்கு மாகாண முன்னாள் மேலதிக செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் : ஜோசப்நயன்)

# பண மோசடியில் ஈடுபட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(கண்டாவளை)

கிளிநொச்சி திருமுறிகண்டி பகுதியில் பெண் ஒருவரை ஏமாற்றி பத்து இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடி செய்த சந்தேகத்தின் பேரில் கைது செய்த குறித்த நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் பெண்ணொருவரிடம் அவரது வெளிநாட்டிலுள்ள உறவினர்கள் பெறுமதியான பொருட்களை அனுப்பியுள்ளதாக தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு தெரிவித்ததுடன் குறித்த பணத் தொகையினை வங்கியில் வைப்பிலிடுமாறு தெரிவிக்கப் பட்டதை அடுத்து 10 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணத்தினை மேற்படி சந்தேக நபரின் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டதாக தெரிவித்து கடந்த செப்டெம்பர் மாதம் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனை அடுத்து பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் கொழும்பு தெமட்டகொடை பகுதியில் வைத்து இச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (5-6-15)

# ஆனைவிழுந்தான் பகுதியில் மோட்டார் குண்டுகள் மீட்பு



(தருமபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் காட்டுப்பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இராணுவத்தினரால் வெடிபொருட்கள் இனங்காணப்பட்டன. அதனையடுத்து அக்கராயன் பொலிஸாருக்கு வழங் ஷகப்பட்ட தகவலுக்கமைய நேற்று நீதிமன்ற அனுமதி யுடன் 44 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர். (5-6-316)

# மன்னார் பிரதேச சபை வரவு-செலவுத் திட்டம் தோற்கடிப்பு

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட கூட்டமானது நேற்று திங்கட்கிழமை மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஹாஜிர் தலைமையில் இடம்பெற்றது.


தவிசாளரின் தலைமை உரையைத் தொடர்ந்து பிரதேச சபையின் செயலாளரினால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவாக 10 உறுப்பினர்களும் எதிராக 11 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

ஒரு வாக்கு வித்தியாசத்தில் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது. (5-6-285)

# மாடு குறுக்கிட்டதால் கட்டுப்பாட்டையிழந்த ஆட்டோ

## மூவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா, புளியங்குளம் ஏ-9 வீதியில் மாட்டுடன் முச்சக்கரவண்டி மோதுண்டு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முச்சக்கரவண்டி வண்டி ஏ-9 வீதியூடாக மாங்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது புளியங்குளம் பகுதியில் வீதியின் குறுக்காக மாடு புகுந்ததில் முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டையிழந்து மாட்டுடன் மோதி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதி உட்பட மூவர் காயமடைந்து ள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்து பொலி ஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-6-250)

# தரமற்ற உரங்களால் மண்ணுக்கு பாதிப்பு ஏற்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

மண்ணுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தரமற்ற உரங்களை பயிர்களுக்கு இடுவதால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக கிளிநொச்சி விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட விவசாய குழுக்கூட்டம் நேற்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அதன் போதே விவசாயிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இரசாயன உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பல்வேறு வகையான உரங்களையும் மிகக்கூடிய விலைகளில் பெற்று பயிர்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது மக்னீசியம் சல்பேற் என்ற உரத்தை அமோனியம் சல்பேற் என சிலர் விற்பனை செய்கின்றார்கள். விவசாயிகள் இவ் உரத்தை வயலில் பயன்படுத்தியுள்ளார்கள்.

இது தொடர்பில், விவசாயிகளுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் விவசாய அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு அறிவிப்புகளை வழங்குவதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானமும் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில், மாவட்ட துறைசார் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (5-315)

# தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளவும் சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பண்டார்ரிக்குளம், உக்குளாங்குளம், ரகுபாக்கம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தமக்கான கொவிட் தடுப்பூசிகளை இன்று காலை 9 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணிவரை பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியில் பெற்றுக் கொள்ள முடியும் என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான முதலாவது டோஸ், இரண்டாவது டோஸ் தடுப்பூசிகளாக சினோபார்ம் தடுப்பூசியும், மூன்றாவது டோஸ் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியும் ஏற்றப்படவுள்ளன. இதனால் தடுப்பூசிகளைப் பெறாதவர்கள், முதலாவது டோஸ் மட்டும் போட்டவர்கள், இரண்டாவது டோஸ் வரை போட்டவர்கள் வருகை தந்து தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் முதலாம் திகதி முதல் கொவிட் தடுப்பூசி அட்டைகள் பொது இடங்களில் பயணிக்கும் போது கட்டாயமாக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருக்கு நேர் மோதிய டிப்பர் வாகனங்கள்

## ஒருவர் ஸ்தலத்தில் பலி, மற்றுமொருவர் படுகாயம்

(திருமலை)

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் பாரிய விபத்துச் சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றது.



திருகோணமலை கண்டி பிரதான வீதியில் முள்ளிப் பொத்தானை 96 ஆவது மைல் கல் பாலத்திற்கு அருகில் நேற்று அதிகாலை 5.55 மணியளவில் இரு பார ஊர்திகள் ஒன்றுக்கொன்று மோதியதில் குறித்த விபத்தானது இடம் பெற்றது.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சீமெந்து ஏற்றிக்கொண்டு ஒரு திசையிலிருந்து வந்த பார ஊர்தி ஒன்றும் சல்லிக் கற்களை ஏற்றியவாறு மறு திசையிலிருந்து வந்த டிப்பர் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

இவ் விபத்துச் சம்பவத்தில் சீமெந்து ஏற்றி வந்த பார ஊர்தியின் சாரதி உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## துன்பங்களை போக்கி மங்கலம் தரும் ராம நவமி



விஸ்வாமித்திரருடன் சென்று தாடகையை வதம் செய்தார். மிதிலையை அடைந்து வில்லை ஒடித்து ஜானகியை மணம் புரிந்தார். கூனியின் சூழ்ச்சியால் கைகேயி தசரதனிடம் பெற்ற வரத்தால் கானகம் சென்றார். சீதையை கவர்ந்து சென்ற இராவணனைத் தேடிச் செல்லும் வழியில் வாலியை வதம் செய்தார். பின்னர் சுக்ரீவன், அனுமன் ஆகியோர் உதவியுடன் கடலுக்கு நடுவில் பாலம் அமைத்து இலங்கைக்கு சென்று போரில் இராவணனை அழித்து விபிஷணனை இலங்கையின் அரசனாக நியமித்தார்.

சீதையை தீக்குளிக்கச் செய்து புஷ்பக விமானத்தில் அழைத்துக் கொண்டு, அயோத்தி சென்று முடிசூடி நல்ல முறையில் அரசாண்டார். இராமன் பிறந்த காலத்தில் ஐந்து கிரகங்களும் மிகவும் உச்ச நிலையில் இருந்தன. அதனால் இராமருடைய ஜாதகத்தை எழுதி, அதை பூஜை அறையில் வைத்து பூஜை செய்பவர்களுக்கு ஜாதக ரீதியாக ஏற்படக்கூடிய நவக்கிரக தோஷம் நீங்கும். வியாதிகள் குணமாகும். ஐஸ்வர்யங்கள் பெருகும் என்பது நம்பிக்கை. 'குலம் தரும் செல்வம் தந்திடும். அருளோடு பெரும் நிலம் அளிக்கும். பெற்ற தாயினும் ஆயினச் செய்யும் நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்.

அது நாராயணா என்னும் நாமம்' என்று திருமங்கை ஆழ்வார் நாராயணா நாம மகிமை பற்றி குறிப்பிடுவார். அதைப் போல் இராம நாமமும் மகத்துவம் நிறைந்தது. இருணு என்ற மகரிஷியின் மகன் ரிட்சன், வேடர் குலத்தை சேர்ந்த இவன், அதே குலப் பெண்ணை திருமணம் செய்து கொண்டான்.

அவர்களுக்கு பல குழந்தைகள் பிறந்தன. வேட்டையாடியும், வழிப்பறிகள் செய்தும் குடும்பம் நடத்தி வந்தான். ஒரு முறை ரிட்சன் முனிவர்கள் சிலரை தடுத்து வழிப்பறி செய்தான். அவர்கள் ரிட்சனிடம், 'நீ வழிப்பறி செய்த பொருட்களை பங்கிடும் உனது உறவினர்கள், அதனால் ஏற்படும் பாவங்களையும் பங்கிட்டு ஏற்றுக் கொள்வார்களா? என்று கேட்டனர்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## ஜனாதிபதியின் புதிய செயலாளராக காமினி செனரத் நியமனம்?

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தரவினால் கையளிக்கப்பட்ட இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஜனாதிபதியின் புதிய செயலாளராக பிரதமரின் தற்போதைய செயலாளர் காமினி செனரத் நியமிக்கப்படக்கூடுமென தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

## இரு வெளிநாட்டவர்கள் உட்பட மேலும் 398 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் மேலும் 398 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் இருவர் வெளிநாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 83 ஆயிரத்து 649 ஆக அதிகரித்துள்ளது. (நி)

## 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்குகிறது சீனா

(கொழும்பு)

இலகு பணப்பரிமாற்றத்தின் கீழ் சீன மத்திய வங்கியிடமிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்தார். (நி)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 350 | 360 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 170 |
| பச்சைமிளகாய் | 900 | 900 | 900 | 1000 |
| தக்காளி | 250 | 300 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 340 | 340 | 380 | 400 |
| கரட் | 300 | 440 | 520 | 550 |
| பூசணி | 80 | 70 | 60 | 120 |
| புடோல் | 300 | 250 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 65 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 200 | 150-250 | 320 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | 240 | 240 |
| பாகற்காய் | 500 | 400 | 380 | 800 |
| வெண்டிக்காய் | 260 | 200 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 110 | 140 |
| பயற்றங்காய் | 320 | 350 | 450 | 350 |
| லீக்ஸ் | 280 | 360 | 300 | 350 |
| பீற்றூட் | 200 | -- | -- | -- |
| கறிமிளகாய் | 350 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1200 | -- |
| போஞ்சி | 250 | 300 | 380 | 350 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 280 | 180 | 220 |
| வெங்காயப்பூ | -- | 400 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 60 | 80 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் அடிப்படையில் கச்சா எண்ணெய் இறக்குமதி

## எரிபொருள் நெருக்கடிக்கு கிடைத்தது தீர்வு

(கொழும்பு)

சிங்கப்பூரில் உள்ள விநியோகஸ்தர் ஒருவரிடமிருந்து கடன் அடிப்படையில் அடுத்த மாதம் 90,000 மெற்றிக் தொன் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யப் போவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஜனவரி 23 அல்லது 24 ஆம் திகதிகளில் கச்சா எண்ணெய் கையிருப்பு இலங்கைக்கு வழங்கப்படுவதுடன்,

அடுத்த ஆறு மாதங்களுக்குள் 540,000 மெற்றிக் தொன் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் எனவும் அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

இந்த கொள்முதல்கள் ஒரு அரச வங்கியால் திறக்கப்பட்ட கடன் கடிதங்கள் மூலம் கடனில் செய்யப்படுகின்றன. கடன் கடிதங்களில் பட்டியலிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் பணம் செலுத்தும் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (நி)




எரிபொருள் விலை ஏற்றம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாக தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி கொத்மலை தவலந்தென்ன நகரத்தில் தீப்பந்த போராட்டமொன்று கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

# சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுங்கள்

## சுகாதார அதிகாரிகள் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் ஒமிக்ரோன் மாறுபாடு உறுதியான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை சுகாதார அதிகாரிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்கத் தவறினால், முன்னர் கொரோனாத் தொற்று அலைகளின் போது ஏற்பட்ட சிரமங்களை நாடு மீண்டும் ஒரு முறை எதிர்கொள்ள நேரிடும் என விசேட மருத்துவ நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றின் ஆபத்து இன்னும் தொடர்கின்ற நிலையில் எச்சரிக்கையாக இருப்பது மிகவும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் நாட்டில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படும் நிலையில் பொதுமக்கள் அனைவரும் உடனடியாக பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் மருத்துவர் கேட்டுக் கொண்டார். (நி)

# யார் வெளியேறினாலும் ஆட்சி கவிழாது



(கொழும்பு)

"அரசில் இருந்து எவரும் விலகிச் செல்ல முடியும். அதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. எனினும், யார் வெளியேறினாலும் அரசை விழ விடமாட்டோம் என ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"யார் வெளியேறப் போகின்றார்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது. அதை அவர்களிடம் கேட்க வேண்டும்.

அதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால், நாங்கள் யாரும் போவதை விரும்பவில்லை. அவர்கள் வெளியேறினாலும் அரசு விழ இடமளிக்க மாட்டோம். எமது பக்கமிருந்து யாராவது சென்றால் எதிரணியில் இருந்து எமது தரப்புக்குச் சிலரை எடுப்போம்.

கொரோனா காரணமாக நாங்கள் மெதுவாகப் பயணித்தாலும், அரசுக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்" என அவர் தெரிவித்தார். (நி)

# முச்சக்கரவண்டி- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதல்

## 6 பேர் படுகாயம்

(பதுளை)

பதுளை - பசறை பிரதான வீதியில், ஏழாம் மைல் கல்லருகே நேற்றுக் காலை முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் ஆறு பேர்படுகாயங்களுக்குள்ளாகியதுடன், அவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து பதுளைப் பொலிஸார் இவ்விபத்துக் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

# இன்று ஒரு தகவல்

## நம் பலமும் பலவீனமும்

நாம் சந்தேகிக்காதவர்களே நமக்கு மிகப் பெரிய எதிரிகளாக இருக்கிறார்கள்.

நம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களுடன் நாம் நெருங்கிப் பழகுவோம். நம் பலவீனங்களை மனம் திறந்து சொல்கிறோம். ஆனால் அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உள்ளம் உள்ளூரச் சந்தோசப்பட்டுக் கொள்கிறது என்பதை நாம் உணருவதில்லை. நம் பலவீனங்கள் பலரும் அறியும்படி விளம்பரப்படுத்தப்படுகின்றன. அவை, அவர்களாலோ, அவர்களின் மூலம் சிலராலோ நமக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒருவருக்குப் புகழ்ச்சியில் பலவீனம், இன்னொருவருக்குப் புட்டியில் பலவீனம். இதை அருகிலிருப்பவன் உணர்ந்து தன் இஷ்டத்திற்கு முன்னவனை ஆட்டிப்படைக்கிறான். பலவீனங்கள் இல்லாத மனிதனையே காண முடியாது. ஆனால்... ஆனால்...

நண்பன், தாய், தந்தை, உடன் பிறந்தவர்கள், உடனிருப்பவர்கள், மனைவி, பிள்ளைகள் என்று எவரிடமும் ஒரு மனிதன் தன் பலவீனங்களை வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

எந்த நேரத்தில் யார் மனம் எப்படி மாறும் என்று கணித்தறிவது முடியாத செயல். நல்லவன் கூடத் தன் நண்பனின் பலவீனங்களை அறிந்தவுடன் அவற்றைக் கொண்டு ஆதாயம் தேடும் பொல்லாதவனாக மாறிவிடுகிறான். அதைச் சாதகமாக ஆக்கிக் கொண்டு, தன் கையை உயர்த்திக் கொள்ள முயல்கிறான்.

ஒரு மனிதனிடம் திட்டங்களும் செயல் திறமையும் செல்வமும் செல்வாக்கும் ஆகிய படை பலங்கள் இருந்தாலும் பலவீனம் என்னும் ஒன்றால் எதிரிக்குச் சரணாகதி அடைய வேண்டியது தான்.

ஏற்கனவே ஒருவர் தன் பலவீனத்தை வெளிப்படுத்தி உலகறியச் செய்திருந்தால், அத்தகைய பலவீனத்தை மெல்ல மாற்றிக் கொள்ள வேண்டும். அத்தகைய பலவீனத்தைத் தன்னால் சமாளித்துக் காட்ட முடியும் என்பதை மெல்ல நிரூபிக்கப் பழக வேண்டும்.

பலவீனத்தை மனம் என்னும் அறைக்குள் போட்டுப் பூட்டிக் கடைந்தெடுத்து விடிவு காண வேண்டுமே தவிர, பகிரங்கப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது.

நம் பலவீனத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருப்பதே- நம் பலங்களுள் தலைசிறந்த ஒன்றாக இருக்க முடியும்.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சகுனி



கம்சபுரம் என்ற ஊரில் சகுனிராசன் என்ற ஒருவன் இருந்தான். படு புத்திசாலியான அவன் அந்நாட்டு அரசனின் ஆலோசகராக இருந்தான்.

அரசனுக்கு எப்பேற்பட்ட பிரச்சினை ஏற்பட்டாலும் சகுனிராசன் அதை எளிதில் தீர்த்து வைப்பான். அதனால் அவனுக்கு கர்வம் அதிகமாக இருந்தது.

சகுனிராசனுக்குமனைவியும் ஒரு மகனும் இருந்தனர். மனைவிக்கு பிறந்த ஆறு குழந்தைகள் இறந்து விட்டன. ஏழாவதாக பிறந்த மகன்தான் வீரராசா.

வீரராசாவை உயிருக்கு உயிராக நேசித்தான் சகுனிராசன். அவன் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுப்பான். மகன் வளர்ந்து இளைஞன் ஆகிவிட்டான்.

ஆனால், தந்தையின் புத்திசாலித்தனம் அவனுக்கு இல்லை. அதைக் கண்டு சகுனிராசன் கவலையடைந்தான்.

சகுனிராசன் தன் மகனையும் புத்திசாலி ஆக்குவதற்காக கடும் முயற்சி செய்து பார்த்தான். ஆனால், மகனது மரமண்டையில் எதுவும் ஏறவில்லை.

வீரராசாவுக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் பெயர் ஞானமணி, புத்திசாலியாக இருந்தான். தன் மகனை விட நண்பன் புத்திசாலியாக இருப்பது சகுனிராசனுக்கு பிடிக்கவில்லை.

வீரராசா கொஞ்சநேரம் கூட ஞானமணியை பிரிந்து இருக்க மாட்டான். ஞானமணியின் தந்தை ஒரு விவசாயி. வயலில் கடுமையாக உழைப்பதை தவிர வேறு எதுவும் தெரியாது.

ஒரு நாள் மகனை அருகில் அழைத்து, "அடே ஞானமணி நீ வளர்ந்து விட்டாய். எனவே, என்னுடன் வந்து வயலில் வேலை செய்யக்கூடாதா?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட ஞானமணி, "அப்பா, நான் வயலுக்கு வந்து வேலை செய்ய விரும்பவில்லை. வீரராசாவின்தந்தையைப் போல் அரண்மனையில் வேலை செய்ய விரும்புகிறேன்" என்றான்.

ஞானமணியை முறைத்துப் பார்த்தான் தந்தை. "அடே அதற்கெல்லாம் புத்தி வேண்டாமா? நல்ல கல்வியறிவு வேண்டாமா? என்றார் தந்தை.


"நான் அவரிடம்கல்வி கற்றுக் கொள்கிறேன்" என்றான் ஞானமணி. "அடே அந்த சகுனிராசன் ஒரு மாதிரியான மனுசன். யாருக்கும் எதையும் கற்றுக் கொடுக்கமாட்டான். அது மட்டுமா கர்வம் பிடித்து திரிகிறான்" என்றான்.

"அப்பா நீங்கள் அவரை சந்தித்து பேசினால் எல்லாம் சரியாகி விடும்" என்றான் ஞானமணி.

"சரி உன் விருப்பத்தைக் கெடுப்பானேன்" என்று கூறிவிட்டு வெளியே கிளம்பினார் தந்தை.

(தொடரும்)

# மகாபாரதம்



286

பார்வதி-கர்மங்களைத் தோற்றுவிப்பது ஆத்மாவா? இல்லையெனில் வேறு யார்?

ஈஸ்வரன்-ஆத்மா கர்மங்களை உண்டாக்குவதில்லை. ஆனால் கர்மங்களினால் பாதிக்கப்படுகிறது. உடலானது கபம், வாதம், பித்தம் ஆகிய மூன்று தாதுக்களால் நிரம்பி இருப்பது போல, சத்துவ குணம், ரஜோ குணம், தாமோ குணம் ஆகிய குணங்களைக் கொண்டிருக்கிறது.

சத்துவ குணம் உடையவர் எப்போதும் புகழுடன் திகழ்வர். ரஜோ குணம் துக்கத்திற்குக் காரணம். தமோ குணம் அறிவின்மைக்கு இடமாகும்.

வாய்மை, தூய்மை, நன்மையில் நாட்டம், பொறுமை, அடக்கமுடைமை, இன்சொல் கூறல் முதலான நற்பண்புகள் சத்துவ குணத்தால் உண்டாகும்.

செயல்திறன், சுறுசுறுப்பு, பொருட்பற்று ஆகியவை ரஜோ குணத்தால் ஏற்படும். பொய், சோம்பல், பிடிவாதம், துக்கம், தூக்கம், வீண்பகை, பிறருக்குத் துன்பம் தருதல் முதலிய பாவச் செயல்கள் தமோ குணத்தால் விளையும்.

அதலால் நன்மை, தீமை ஆகிய கருமங்கள் குணங்களால் அமைபவை. எனவே ஆத்மா ஆசையற்றது. விகாரமற்றது. தூய்மையானது.

சத்துவகுணம் உள்ளவர் தேவருலகில் சென்று பிறப்பர். ரஜோ குணம் உள்ளவர் மனிதப் பிறவி எடுப்பர்தமோ குணம் உள்ளவர் விலங்கு கதி, நரக கதி என்னும் கதிகளில் பிறவி எடுத்து துன்புறுவர்.

பார்வதி- இந்த உடல் கொல்லப்பட்டால்ஆத்மா இதனை விட்டுப் போய் விடுகிறதே... அது எதனால்?

ஈஸ்வரன்-மிக நுட்பமான அறிவு படைத்தவரும் இதனை விளக்க முடியாது துன்புறுவர். பிறவி எடுத்து உயிர்களின் கர்மம் முடியும் போது ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு உடலுக்கு இறுதி ஏற்படும்.

அதனால் உடல் அழியும் போது ஆத்மா அதன் கருமத்திற்கு ஏற்ப பயனை அனுபவித்து அந்த உடலை விட்டுப் பிரிந்து சென்று விடுகிறது. உடல் அழிவுக்கான நோய்களினால் ஆத்மா துன்புறுவதில்லை.

உடலை வெட்டினாலும், குத்தினாலும் கொன்றாலும், தர தர என இழுத்துச் சென்றாலும் ஆத்மாவிடத்தில் ஒரு மாறுதலும் ஏற்படாது.

அனுபவிப்பது உடல்தான். கர்மத்தின் பயன் உள்ளவரை உடலில் ஆத்மா தங்கியிருக்கும். பிரிய வேண்டிய காலம் வரும் போது பிரிந்து விடும். இதையே உலகோர் மரணம் என்கின்றனர்.

பார்வதி-பிறருக்கு நன்மை செய்பவன் நன்மையை அடைந்து இன்புறுகிறான் என்பது சரி. ஆனால் பிறருக்குத் துன்பம் செய்பவன் எப்படி இன்பத்தை அடைகிறான்? இருள் என்பது என்ன?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மீளாய்வு செய்யப்படவேண்டிய பதிவுத் திருமண சுற்றுநிருபம்

வெளிநாட்டுப் பிரஜாவுரிமை பெற்ற ஒருவர் இலங்கையில் திருமணம் செய்வதாக இருந்தால், அந்தப் பதிவுத் திருமணத்தை மேலதிக மாவட்டப் பதிவாளர்களே மேற்கொள்ள முடியும் என்பதான சுற்றுநிருபத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இதனை இன்னும் தெளிவாகக் கூறுவதாயின், இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாட்டுக்குச் சென்று, அங்கு பிரஜாவுரிமை பெற்றவர்கள்; தாய் நாட்டுக்கு வந்து, அங்கு பதிவுத் திருமணத்தைச் செய்வதாக இருந்தால், அதனை பிரதேச செயலகங்களில் இருக்கக்கூடிய மேலதிக மாவட்டப் பதிவாளர்களே செய்ய முடியும் என்பது, வெளியாகியுள்ள சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்.

இதற்கு முன்னதாக, அந்தந்தப் பகுதிகளுக்கென நியமிக்கப்பட்ட விவாகப் பதிவாளர்கள் குறித்த திருமணப் பதிவை நிறைவேற்றி வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு அந்தப் பகுதிகளுக்குரிய விவாகப் பதிவாளர்களிடம் இருந்து வெளிநாட்டுப் பிரஜைகளுக்குப் பதிவுத் திருமணம் செய்து வைக்கின்ற கடமை நீக்கப்பட்டு, அது மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கு மாற்றப்படும் போது நடைமுறைச் சிக்கல்கள் எழும் என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

அந்த வகையில், பதிவுத் திருணம் என்பது சட்டரீதியானதாக இருந்தாலும் அதற்குரிய சுபநேரத்தில் பதிவுத் திருமணம் செய்கின்ற வழமை நம்மிடம் உண்டு.

ஆக, இவ்வாறான சுபநேரத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேச செயலக எல்லைக்குள், வெளிநாட்டுடன் தொடர்புபட்டதான ஒன்றுக்கு மேற்பட்ட திருமணப் பதிவுகள் இடம்பெறலாம்.

இந்நிலையில், தனியொரு மேலதிக மாவட்டப் பதிவாளர் குறித்த சுபநேரத்தில் பதிவுத் திருமணத்தைச் செய்ய முடியுமா? என்பது எம்மிடம் எழக்கூடிய நியாயபூர்வமான கேள்வி.

இது ஒருபுறம் இருக்க, பதிவுத் திருமணம் செய்கின்றவர்கள் தொடர்பில் மேலதிக மாவட்டப் பதிவாளர்களைவிட, அந்தந்தப் பகுதி விவாகப் பதிவாளர்களுக்கே விபரங்கள் நன்கு தெரிந்திருக்கும்.

அதாவது குறித்த பகுதி விவாகப் பதிவா ளர் குறித்த ஊரைச் சேர்ந்தவராக இருக்கும் போது, பதிவுத் திருமணம் செய்கின்றவர்களில் ஒரு தரப்பையேனும் அவர் நன்கு தெரிந்தவராக இருப்பார்.

ஆனால் மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு அவ்வாறான சந்தர்ப்பம் இல்லை என்றே கூறவேண்டும்.

இதுபோல, புதிய சுற்றுநிருபத்தின்படி வெளிநாட்டுப் பிரஜாவுரிமை பெற்ற நம்மவர் ஒருவர் இங்கு பதிவுத் திருமணத்தைச் செய்வதற்காக அதிகூடிய நிர்வாக ஏற்பாடுகளை நிறைவேற்றவும் அலையவும் வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

நிலைமை இப்படியாக இருக்குமே என்று நிமிர்ந்து பார்க்கும்போது; தேவாலயங்களில் நடைபெறும் பதிவுத் திருமணத்துக்கு இந்தச் சுற்றுநிருபம் விதிவிலக்களிக்கிறது என்றால், அதன் பொருள் என்ன?

ஆக, ஒரு தரப்பை திட்டமிட்டு பாதிக்கச் செய்கின்ற ஒரு நடவடிக்கையாகவே மேற்போந்த விடயத்தை நோக்க வேண்டியுள்ளது.

ஆகையால், குறித்த சுற்றுநிருபம் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

# ஈரானுடன் இணக்கப்பாட்டுக்கு வந்ததுபோல் ஏனைய நாடுகளுடனும் கலந்துரையாடவேண்டும்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

ஈரானுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை தேயிலை ஏற்றுமதி செய்து அடைப்பதற்கு இணக்கப்பாட்டுக்கு வந்ததுபோல் ஏனைய நாடுகளுடனும் கலந்துரையாடி சலுகை அடிப்படையில் கடனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆளும் கட்சி உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவ்வாறு இல்லாமல் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தால் நாங்கள் மேலும் நெருக்கடிக்கு ஆளாகுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடு பாரிய டொலர் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு ஆளாகி இருக்கின்றது. அதனால் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதிலும் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அதேபோன்று தற்போது கைவசம் இருக்கும் வெளிநாட்டு செலாவணி அடுத்த வருடம் வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டிய கடன் தவணைகளுக்குக்கூட போதுமானதாக இல்லை.

அதனால் கடன் பெற்றுக்கொண்ட நாடுகளுடன் கலந்துரையாடி கடனை மீள செலுத்துவதற்கு மேலும் சில கால அவகாசம் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்றும் கூறினார். (ம)

# பணி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு, எதிர்வரும் 30.12.2021 வியாழக்கிழமை மற்றும் 31.12.2021 வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்கள் யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீட கடமைகள் இடம்பெறமாட்டாது எனவும் மீண்டும், 03.01.2022 திங்கட்கிழமை தொடக்கம் வழமைபோல் அனைத்து சேவை களும் இடம்பெறும் எனவும் யாழ். மாவட்ட காணி பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்**தில் மாப்பியன், சுதுமலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதே**சத்தில் கச்சேரி, சாந்தசோலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வவுனியாவில் மீண்டும் கோவிட் சடலங்கள் தகனம்

## வவுனியா நகர சபை தவிசாளர்

(வவுனியா)

வவுனியா நகர சபையின் பூந்தோட்டம் மயானத்திற்கு எரிவாயு கிடைக்கப் பெற்றதையடுத்து மீண்டும் கோவிட் சடலங்களை தகனம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நகர சபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

கோவிட் சடலங்கள் தகனம் செய்வது தொடர்பில் நேற்று அவர் கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகர சபைக்குச் சொந்தமான பூந்தோட்டம் மின் மயானத்தில் கோவிட் தொற்றால் மரணிப்பவர்களின் உடலங்கள் தகனம் செய்யப்பட்டு வந்தன. எரிவாயு தட்டுப்பாடு நிலவும் நிலையில் மின் மயானத்தில் எரிவாயு முடிந்தமையால் கடந்த சில நாட்களாக மின்மயானத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கோவிட் தொற்று காரணமாக மரணமடைந்த சிலரது உடல்கள் தகனம் செய்ய முடியாது திருப்பி அனுப்பப்பட்டன.

இந்நிலை தொடர்பில் சுகாதாரப் பிரிவினர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியிருந்தோம். வவுனியா மாவட்ட அரச அதிபரால் மின் மயானத்திற்கு நான்கு எரிவாயு சிலிண்டர்கள் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

இதனால் மீண்டும் கோவிட் சடலங்களை தகனம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, கோவிட் தொற்றுக் காரணமாக மரணிப்பவர்களின் சடலங்களை வழமை போன்று தொடர்ந்தும் வவுனியா நகர சபையின் பூந்தோட்டம் மின் மயானத்தில் தகனம் செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-250,299)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## சாதனை படைப்பது எப்படி?

❖ ஒழுக்கம் நிறைந்த மனிதனே நிஜமான கல்விமான்.

❖ தன்னம்பிக்கையை இழப்பது தெய்வ நம்பிக்கையை இழப்பதற்குச் சமம்.

❖ குற்றம் காண்பதை விட குணத்தைக் காண்பது தான் உயர்ந்த குணம்.

❖ பெற்றுக் கொள்பவன் அல்ல. கொடுப்பவனே பேறு பெற்றவன்.

❖ தன்னலத்தை ஒழிப்பதில் தான் மகிழ்ச்சி அடங்கி இருக்கிறது. உன்னைத் தவிர வேறு யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

❖ தன்னை மறந்து பணியாற்றும்போது தான் கடமையில் சாதனை படைக்க முடியும்.

❖ கோபப்படும் மனிதனால் சிறப்பாக பணியில் ஈடுபட முடியாது. மன்னிக்கும் மனோபாவம் கொண்டவனே, தனது பணியில் தீவிரமாக செயல்பட முடியும்.

❖ எல்லோருக்கும் ஒரே மாதிரியான இன்பம் தரும் பொருள் உலகத்தில் இல்லவே இல்லை.

❖ கருணை நிறைந்தவர்களாக மாறுங்கள். ஏனெனில், கருணையே இனிய [illegible]

❖ [illegible] பாருங்கள். ஆனால், உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

42



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

சில ஆரம்பகால எழுத்து முறைகள் கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.1 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரியனவாகவுள்ளன. இதிலுள்ள பல பிராமி எழுத்து முறைகளுள் தமிழ்ப் பிராமிபட்டிப்புரலு எழுத்து முறைக்கு நெருங்கியதாயுள்ளது (படம் 1 ஐப் பார்க்கவும்). தமிழ்ப் பிராமி வழமையான பிராமியிலிருந்து வேறுபடுத்திக் கண்டறியப்பட்டுள்ளது. இதன் எழுத்து முறை தமிழர்களின் ஆரம்ப வரலாற்றுடனும் அவர்களின் சங்க இலக்கியம் போன்ற இலக்கிய உருவாக்கத்திலும் பயன்பட்டது. தமிழ்ப் பிராமி தற்போதைய தமிழ் எழுத்து முறை. மலையாள எழுத்து முறை என்பனவற்றின் முன்னைய முறையான வட்டெழுத்தின் முன்னோடியாகும்.

அயல் நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பானை ஓடுகள்



துறை (தாய்லாந்து) சாதன் (எகிப்து)

தென்புலப்புள்ளி முறையின் (dot method) படி, எந்தக் குறுங் கோடும் போடாத எழுத்து அகர உயிர் மெய்யையும் புள்ளி போட்ட எழுத்து மெய்யையும் குறித்தன. வடபுல அடுக்குக் கட்டு முறையின் (stacking method) படி, ஒன்றின் கீழ் இன்னோர் உயிர் மெய்யைப் பொருத்தி மேலது மெய்யாகவும், கீழது உயிர்மெய்யாகவும் கொள்ளப்பட்டது.

### தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடங்கள்

எகிப்து, தாய்லாந்து, ஓமன் (கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து)

• எகிப்தில் லெக்குஸ்லிமன் என்ற இடத்தில் கி.மு. 1 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரிய உடைந்த சாடி ஒன்று தமிழ்ப்பிராமி எழுத்துக்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் "பானைஒறி" என்று எழுதப்பட்டிருந்தது. இதே இடத்தில் இதற்கு முன்னரும் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

• கி.மு.1 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரிய உடைந்த சாடியில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் எகிப்தில் பெரின்ஸ்ரொக்ளோடிசியா என்ற குடியேற்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன.

• கி.மு. 2 ஆம் நூற்றாண்டு கால மட்பாண்டத்தில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் தாய்லாந்தில் கண்டு பிடிக்கப்பட்டன. தாய்லாந்தில் குவா ன்லுக்பட் என்ற இடத்தில் கி.மு. 3 ஆம்-4ஆம் நூற்றாண்டு உரைகல் ஒன்றில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

• ஓமன் நாட்டில் தமிழ்-பிராமி பானைசிதில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் ணந்தைகீரன் என்ற சொல் உள்ளது. இது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என மதிப்படப்பட்டுள்ளது. இத்தாலி நாட்டை சேர்ந்தவர்கள் ஓமனில் இதனைக் கண்டுள்ளார்கள்.

தாய்லாந்தில் உள்ள பிராமி எழுத்துக்களையும் எகிப்தில் உள்ள பிராமி எழுத்துக்களையும் தமிழ் பிராமி என இனங்கண்டது "ற" என்ற தமிழ் ஒலிக்கான பிராமி எழுத்தே ஆகும். இந்த முறைமை தனித் தமிழ் எழுத்துமுறைமை எனக் கூறப்படுகிறது.

#### இலங்கை

• கி.மு. 2 ஆம் நூற்றாண்டு கால மட்பாண்ட துண்டுகள் பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்டன.

• கி.மு. 3 ஆம் நூற்றாண்டு கால கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்டன.

• தட்டையான தட்டத்தின் கறுப்பு, சிவப்பு மட்பாண்டத் துண்டுகள் தமிழ்ப்பிராமி எழுத்துக்களுடன் இலங்கையின் திசமகாராமையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் காலம் ஏறத்தாழ கி.மு. 300 என அகழ்வினை மேற்கொண்ட ஆராச்சியாளர் தெரிவித்துள்ளார்.

#### இந்தியா

• கி.மு. 2 ஆம் நூற்றாண்டு பானையில் வாயில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் கேரளாவில் கண்டு பிடிக்கப்பட்டன.

• கி.பி. 3 ஆம் நூற்றாண்டு கால நான்கு தமிழ்ப் பிராமி கல்வெட்டுக்கள் கேரளாவிலுள்ள குகையிலும் மலையிலும்காணப்பட்டன. அதில் ஒன்று "சேரன்" என்ற சொல்லுடன் காணப்பட்டது.

#### தமிழ்நாடு

• ஆதிச்ச நல்லூரில் இருந்து ... காலத்தைச் சேர்ந்த தாழி கண்டு பிடிப்பு.

• கி.மு. 500 கால தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் ஈரோட்டுக்கு அருகிலுள்ள சென்னிமலையிலுள்ள கொடு மணலில் கண்டுபிடிக்கப்பட்டன.

• கி.மு. 500 கால தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பழனிக்கு தென் மேற்கில் 12 கி.மீ. துரத்திலுள்ள பொருந்தலில் கண்டு பிடிக்கப்பட்டன.


• தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் மதுரை திருப்பரங் குன்றத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. அதில் "மு-ன-க-ர" எனவும் "மு-ஹ-க-டி" எனவும் எழுதப்பட்டிருந்தது. இது முதலாம் நூற்றாண்டுக்கு உரியது.

• ஐந்தாம் "வீரர்" கல் (நடுகல்) தமிழ்ப்பிராமி எழுத்துக்களுடன போர்ப்பனக் கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்டன.

• விருத்தாசலம் அருகே தர்ம நல்லூரில் தமிழ் பிராமி எழுத்துக்களோடு 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய பானை ஓடு கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையின் திசமகாராமை தமிழ் பிராமிச்சாசனம் என்பது கறுப்பு, சிவப்பு மட்பாண்ட தட்டையான தட்டங்களில் தமிழ் பிராமியில் பொறிக்கப்பட்ட இலங்கை திசமகாராமையில் அகழ்வில் கண்டு பிடிக்கப்பட்ட மட்பாண்டத்தைக் குறிக்கிறது.

இது சுமார் கி.மு.200 ஆண்டு காலத்திற்குரியது என அகழ்வினை மேற்கொண்ட ஜேர்மனிய அறிவியலாளர் குறிப்பிடுகின்றார். இச்சாசனம் பிராமி மற்றும் பெருங் கற்கால கிறுக்கல் குறியீடுகள் கலந்து காணப்படுகின்றது. அது தற்போது காணாமல் போய்விட்டது. (படம் அ)



படம் அ

திசமகாராமையில் அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டு

நன்றி-விக்கிப்பீடியா

ஆனைக்கோட்டை முத்திரை (கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து)

ஆனைக்கோட்டை முத்திரை (Anaikoddai Seal) என்பது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆனைக்கோட்டை என்னும் இடத்தில், 1980 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற அகழ்வாய்வு ஒன்றின்போது கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரை ஆகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு அடக்கக்குழி ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்ட இம்முத்திரை ஒரு மோதிரத்தின் முன்பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த முத்திரை எதனால் செய்யப்பட்டது என்பது தொடர்பாக ஆய்வாளர்கள் மத்தியில் முரண்பட்ட கருத்துக்களே இருந்து வருகின்றன. பேராசிரியர் கா.இந்திரபாலா இந்த முத்திரையானது உலோக முத்திரை எனத் தமிழக இந்து பத்திரிகையில் 1981 இல் எழுதிய கட்டுரையில் கூறியிருந்தார். ஆனால், அவர் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பாகக் குறிப்பிடவில்லை. பொ.இரகுபதி (1987) இந்த முத்திரையானது வெண்கலத்தினால் (Bronze) செய்யப்பட்டது என்றுள்ளார். ஜராவ தம்மகாதேவனும் (2003), பேராசிரியர் சி.பத்மநாதனும் (2006) அது உலோகத்தால் ஆனது என்றுள்ள போதும், அது எந்த உலோகத்தினால், அல்லது உலோகக் கலவையால்ஆனது என்பதைக்குறிப்பாகக் கூறவில்லை. எதுவிதத்திலும் க.இந்திரபாலா 2006 ஆம் ஆண்டில் எழுதி யிருந்த நூலில், அது Steatite (Soapstone) ஆல் ஆனது என்றுள்ளார். முத்திரையின் கீழ்வரிசையில் மூன்று பிராமி எழுத்துக்களும் மேல் வரிசையில் மூன்று அடையாளங்களும் காணப்படுகின்றன.

மேல் வரிசையிலுள்ள மூன்று அடையாளங்களுள் ஒன்று ரோம எழுத்தான C போன்ற அடையாளத்தின் வளைவு உச்சிப்புள்ளியில் ஒரு குற்றும் காணப்படுகிறது. மற்றைய இரண்டு அடையாளங்களும் ஒரே மாதிரியாகத்தோற்றமளிக்கின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 பேர்...

டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,901 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வடக்கு மாகாண...

என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

2022ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து வட மாகாண மேல் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் யாவும் வழமை போல் இடம்பெறும்.

அத்துடன் வழக்குடன் தொடர்புடையோர் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரம் வீழ்ந்ததில்...

சுளாம்பதியைச் சேர்ந்த எட்வேட் மதிவண்ணன் (வயது-41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரம் வெட்டும் கூலித்தொழிலாளியான இவர் நேற்று முன்தினம் அளவெட்டி, மாசியப்பிட்டி பகுதியில் மரத்தினை கூலிக்காக வெட்டச் சென்றுள்ளார் அப்போது மரத்தை இழுத்து வீழ்த்த முற்பட்டபோது மரத்தினுள் வீழ்ந்து அகப்பட்டுள்ளார்.

இதனால் பலத்த காயமடைந்த நிலையில் அன்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

## லான்ட் மாஸ்...

வயதான சுந்தரராஜா என்பவரே உயிரிழந்தவராவார்.

தவறிவிழுந்த இவரின் தலைமீது லான்ட் மாஸ்ரரின் சில்லு ஏறியதில் இவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-30)

## சிலைகள் கடத்தி...

யாழ்ப்பாணம் வலி.வடக்கில் ஆலய விக்கிரகங்களைக் கடத்தி விற்பனை செய்து வந்த இருவரையும் எதிர்வரும் ஜனவரி 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலயங்களிலிருந்த பிள்ளையார் உள்ளிட்ட இந்துக் கடவுள்களின் விக்கிரகங்களைக் கடத்திக் கொழும்பில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கீரிமலை நல்லிணக்கபுரம் மற்றும் புத்தூர் நவக்கிரிப் பகுதியைச் சேர்ந்த இருவர் கடந்த 24 ஆம் திகதி காங்கேசன்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கடந்த- 09ஆம் திகதிமுதல்23ஆம்திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் கொழும்புக்குக் கடத்தி விற்பனை செய்யப்பட்ட விக்கிரகங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கொழும்புக்கு விரைந்த பொலிஸ் குழுவினர் 25ஆம் திகதி கொழும்பில் விற்பனை செய்யப்பட்ட 20 விக்கிரகங்களை மீட்டு வந்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவர்களை எதிர்வரும் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-18,33)

## வங்குரோத்து..

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நாடு மிக வேகமாக வங்குரோத்து நிலைமையை நோக்கிபயணித்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நாடு இவ்வாறு நிதி ரீதியாக வங்குரோத்து அடைந்தால், பல தசாப்தங்களுக்கு நாடு அதில் இருந்து மீள முடியாது போகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் இருந்து தப்பித்து நாட்டை முன்நோக்கி கொண்டு செல்வதற்காக எதிர்வரும் ஜனவரிமாதம்தான் பொது வேலைத்திட்டம் ஒன்றை முன்வைக்க உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவரிடம் இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி தீர்க்க முடியுமா? அல்லது வேறு விதமாக தீர்க்க முடியுமா? என்பது குறித்து மிகவும் புத்திசாலித்தனமாக செயற்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும் இந்த இடத்தில் மிகப் பெரிய பொறுப்பு பாராளுமன்றத்திற்கு இருக்கின்றது. அரசியலமைப்புச் சட்டத்தின் 148 சரத்திற்கு அமைய நிதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிதி தொடர்பான நெருக்கடி. இதனால் கட்சிகள், தலைவர்களுக்கான ஆதரவு என்பவற்றுக்கு அப்பால் சிந்தித்து, செயற்பட வேண்டியது அனைவருக்கும் உள்ள பொறுப்பாகும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

## 'குடும்ப ஆட்சி...

நெருப்புக்குப் பதிலாக நெருப்பால் எரிகின்றார்கள். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டொலர் மாபியாவின் கைப்பாவை. அவர் நாட்டின் அனைத்துப் பிரஜைகளுடனும் ஏற்றுமதியாளர்களுடனும் விளையாடுகின்றார்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் பணியை முன்னெடுத்த ஒருவர் பதவி விலகியுள்ளார். எனினும், நாட்டின் பொருளாதாரத்தை அழித்த குற்றத்துக்கான பொறுப்பில் இருந்து அவர்களால் விடுவிக்க முடியாது என்றார். (ம)

## கடன் கொடுத்த...

முக்கிய நிலப்பரப்புகளை நைஜீரியாவிற்கு விற்க வேண்டியேற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

அத்துடன் இதே நிலைமை தொடருமாயின் கடன் பெற்ற அனைத்து நாடுகளுக்கும் இலங்கையிலுள்ள நிலப்பரப்புகளை வழங்க வேண்டிய நிலையே ஏற்படும்.

நாட்டில் தற்போது காணப்படும் டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச தொடர்புகள் உள்ள ஒருவரால் மாத்திரமே முடியும்.

இலங்கையில் அவ்வாறு சர்வதேச தொடர்புகள் காணப்படும் ஒரேயொரு தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே ஆவார்.

எனவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் மாத்திரமே தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம)

## ஜே.வி...

"மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி கூட்டணியுடன் விமல் வீரவன்ஸ மற்றும் குமார் குணரட்னம் ஆகியோர் இணைய முடியும்.

எனினும், தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்குவார்கள் என்றால், அவர்கள் கூட்டணியில் இணைந்து புதிய அரசை அமைக்கும் போராட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்" எனவும் அவர் கூறினார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே ஜயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டார். (ம)

## அமெரிக்காவுக்கு...

மலேசியா விற்கான பிரதி உயர்ஸ்தானிகரான மேஜர் ஜெனரல் உதய பெரேராவிற்கே குடும்பத்தினருடன் அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அவரை யுத்தகுற்ற சந்தேகநபர் என அமெரிக்கா அடையாளப்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பதவி விலகலை...

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஜனாதிபதியின் புதிய செயலாளராக காமினி செனரத் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் என அரசாங்கத்தின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2021.12.27
சீட்டிழுப்பு இலக்கம் - 659
Y 03 06 25 78
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2924
ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கங்கள் 18 20 34 38
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/12/27
சீட்டிழுப்பு இலக்கம் 4629
ஆங்கில எழுத்து P | வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 2 9 6 7 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0977
வெற்றி எழுத்து L | சுப்பர் இலக்க 18 | வெற்றி இலக்கங்கள் 30 53 75 76

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1189
வெற்றி இலக்கங்கள்
தனுசு 3 9 8 8 9 5
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1432
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 27.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 66,848,718
வெற்றி இலக்கங்கள் 28 41 57 77 | ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3767
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 27.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,399,240
வெற்றி இலக்கங்கள் 29 47 57 75 | ஆங்கில எழுத்து Z
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1606 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 27.12.2021 | தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 26 38 61 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் :. 51,576,065/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 27.12.2021
வெற்றி வாரம் 3318
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 38 45 55 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,574,260/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1797
சீட்டிழுப்பு திகதி 27.12.2021
வெற்றி இலக்கங்கள் 15 28 67 69 | ஆங்கில எழுத்து M
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 29,382,124/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களை அடிமைப்படுத்தவே

# வடக்கில் பௌத்த சின்னங்கள் பலாத்காரமாக அமைக்கப்படுகின்றன

## குற்றவியல் பொலிஸாரிடம் நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)



- தமிழ் மொழியே இலங்கையின் ஆதிமொழி
- விடுதலைப் புலிகளை அரசே ஆயுதம் ஏந்த வைத்தது
- முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கும் மேலான பொதுமக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்

**தமிழ் மொழியே இலங்கையின் ஆதி மொழி என்றது.**

**என் கருத்து -** இலங்கையின் ஆதிக் குடிகள் பேசிய மொழி தமிழ் மொழியே. சிங்கள மொழியானது அண்மைய மொழியொன்று. கி.பி 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில்தான் குறித்த மொழி பாவிப்புக்கு வந்தது. இது ஒரு சரித்திர ரீதியான உண்மை. எனது பொது இளமாணிப் பரீட்சைக்கு நான் வரலாறை ஒரு பாடமாக எடுத்திருந்தேன். அரசியல் யாப்பின் 14ஆவது உறுப்புரையின்படி இவ்வாறான எனது கருத்தை வெளிப்படுத்த எனக்கு உரிமையுண்டு.

**நான் மகாவம்சத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது**

**என் கருத்து -** மகாவம்சத்தை இல்லை என்று எவரும் கூற முடியாது. ஆனால் அந்நூல் பௌத்த மதத்தைப் பெருமைப் படுத்துவதற்காக எழுதப்பட்ட கட்டுக்கதை. இதனை அதன் ஆசிரியரே ஒவ்வொரு செய்யுளின் அந்தத்திலும் குறிப்பிட்டுள்ளார். அது ஒரு கட்டுக்கதை என்பதால் அதன் பொருளடக்கத்தை வரலாற்று ரீதியான சான்றுகள் என்று கொள்ள முடியாது.

அந்நூல் பாளி மொழியில் பௌத்த மதத்தைப் பெருமைப்படுத்த எழுதப்பட்ட ஒரு கட்டுக்கதையே என்பதுதான் என்னுடைய தற்போதைய கருத்துமாகும்.

**எல்.டி.டி.ஈ என்பது ஒரு பயங்கரவாத இயக்கமல்ல. இலங்கை அரசாங்கங்களே அவர்களை ஆயுதமேந்த வைத்தார்கள் என்பது.**

**என் கருத்து -** தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிய தமிழ் இளைஞர்களின் ஒரு விடுதலை இயக்கத்தினர் ஆவர். பிரிட்டிஷாரை எதிர்த்து இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சேனை அணியைப் போன்றவர்கள் . பின்வரும் நிகழ்வுகள் நிகழ்ந்திருக்காவிட்டால் அரச படைகளை எதிர்க்க எமது இளைஞர்கள் ஆயதமேந்தியிருக்கமாட்டார்கள்.

திட்டமிட்டு தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் வடக்கு கிழக்கிற்கு அப்பால் வெளியிடங்களில் இருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றியிருக்காவிட்டால்

"சிங்களம் மட்டும்" சட்டத்தை இயற்றியிருக்காவிட்டால்

உயர் கல்வியில் சமநிலைப்படுத்தல் என்ற ஒரு கொள்கையைப் புகுத்தியிருக்காவிட்டால்

1958இல், 1983இல்மேலும்வேறு காலகட்டங்களில் வெறித்தனமான கலகங்களை தமிழர்களுக்கு எதிராக ஏற்படுத்தி குழந்தைகள், இளைஞர்கள், வயோதிபர் என்று பார்க்காது முரட்டுத்தனமாக அவர்களைக் கொன்று குவித்ததுமல்லாமல் பெண்களை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தாது இருந்திருந்தால்

யாழ். நூலகத்தை எரிக்காது இருந்திருந்தால்

வடக்கு கிழக்கை இராணுவ மயமாக்காது இருந்திருந்தால்

**முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கும் மேலான பொதுமக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டார்கள் என்பது.**

**என் கருத்து -** இது ஒரு உண்மை. பாதுகாப்பு பிரதேசங்கள் என்று அரசின் முகவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அங்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அவர்கள் மீது குண்டுகள் போடப்பட்டன. மக்களுக்குச் சென்றடைய வேண்டிய உணவு, மருந்துவகைகள் என்பன வெகுவாகக் குறைக்கப்பட்டு பலர் பட்டினியாலும் நோய்களாலும் செத்துமடிய இடமளிக்கப்பட்டது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதற்கு சான்றுகள் பல உள்ளன.

**பலாத்காரமாக புத்தர் சிலைகள் வடக்கில் அமர்த்தப்படுகின்றன என்பது**

**என் கருத்து -** இது ஒரு உண்மை. சிலருக்கு எதிராக வழக்குகளும் பதியப்பட்டுள்ளன. நான் முதலமைச்சராக இருந்தபோது இவ்வாறான வழக்குகள் பற்றி எனக்குத் தெரியவந்தன. முழு விபரங்களும் உரிய அலுவலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதுபற்றிய எனது கருத்தை வெளியிட அரசியல் யாப்பின் உறுப்புரை 14இன் கீழ் எனக்குரித்துண்டு.

**பௌத்த சின்னங்களை அமர்த்துவது தமிழ் மக்களை அடிமைப்படுத்தவே என்பது**

**என் கருத்து -** அரசாங்கத்தினாலும் அதன் முகவர்களாலும் வடகிழக்கில் காணிகள் கைப்பற்றப்பட்டு வருவது என்பது ஒரு உண்மை. இதன் நோக்கம் வடகிழக்கின் மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுத்துவதே. பௌத்த சிலை அமைத்தல் இந்த நோக்க நடவடிக்கைகளுள் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


### வீட்டு உதவியாளர் தேவை

வீட்டில் தங்கி இருந்து வீட்டு உதவிகள் செய்யக்கூடிய மற்றும் இரண்டு வயது குழந்தையை கவனிக்கக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (9275)

077 700 2552

### காணி விற்பனைக்கு

காரைநகரில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு ஒன்றின் விலை 3,50,000/= (9274)

076 585 2685

### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (6926)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

### விற்பனைக்கு

சுப்பர்மாக்கற்களுக்கு மற்றும் பலசரக்கு வியாபாரங்களுக்கு உபயோகிக்கக்கூடிய பாவித்த றாக்கைகள், தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. (9271)

077 471 1312

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9276)

076 825 7716 (ஆகாஸ்)

### புவியியல் கருத்தரங்கு

PART-I

30.12.2021, 31.12.2021 திகதிகளில்
9.00 Am - 2.00 Pm (C-3370)

P.S. குமரன்

பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

( வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். )

077 611 6453

### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள புடைவை மற்றும் பான்சி கடைகளுக்கு பெண் வேலையாட்கள் தேவை. (9264)

077 500 0167



### FIXED JOB

Inner Circle

Job! Job! Job! ...

076 770 7759

076 756 5659 WhatsApp

நீங்கள் O/L, A/L பயின்றவரா?

இவ் இலக்கத்துக்கு அழைத்து

உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க.

வடமாகாணத்தில் முதல் 40 பேருக்கு முன்னுரிமை

- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- முகாமைத்துவ உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சிக்காலத்தில் 24,500/= பின்னர் குறைந்தது 45,000/= (9277)

The Inner Circle (Pvt)Ltd.

இல. 100/3, மானிப்பாய் வீதி (முட்டாசுகடைச் சந்தி), யாழ்ப்பாணம்

### வேலை வாய்ப்பு (பெண்)

Computer Shop ஒன்றிற்கு ஆங்கிலத்தில் சித்தியுடன் கணனியில் அனுபவமுள்ள பெண் வேலைக்குத் தேவை.

வயது எல்லை 22 – 30

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9278)

SS SYSTEMS

இல. 66, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

☎-077 794 5678

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL (C-3286)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.